பிரஸார் பாரதி

<u>அகில இந்திய வானொலி, சென்னை-4</u>

30 03 2024 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாரத் ரத்னா விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கினார்.

2. மக்களவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளின் இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படவுள்ளது.

3. தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகளை வெளியிட தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

4. ஹமாஸ் அமைப்புடன் சண்டை நிறுத்த பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

*----- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<<>>>>>>**

பாரத் ரத்னா விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் பிரதமர்கள் சரண்சிங், பி.வி. நரசிம்மராவ், பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் கர்பூரி தாக்கூர், பிரபல வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் ஆகியோருக்கு மறைவுக்கு பிந்தைய பாரத் ரத்னா விருது வழங்கப்பட்டது.

முன்னாள் துணைப் பிரதமர் திரு. எல்.கே. அத்வானிக்கும் நாட்டின் மிக உயரிய பாரத் ரத்னா விருதினை குடியரசுத்தலைவர் வழங்கினார்.

இந்த விழாவில், பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

<<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படவுள்ளது.

நாடுமுழுவதும் மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளிலும், புதுச்சேரியிலும் அடுத்த மாதம் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் நிறைவடைந்து, மனுக்களை திரும்பப் பெற இன்று மாலை ஐந்து மணிவரை கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிடவுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் இறுதி வேட்பாளர் பட்டியலும் இன்று மாலை வெளியிடுப்படுகிறது.

<<<<<<<>>>>>>

தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகளை வெளியிட தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

ஏப்ரல் 19-ஆம் தேதி காலை முதல், ஜூன் ஒன்றாம் தேதி மாலை வரை இந்த தடை அமலில் இருக்கும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஏழு கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடைபெறும் நிலையில், ஒவ்வொரு கட்டத் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகளை வெளியிடுவதற்கு தேர்தல் ஆணையம் அனுமதி மறுத்துள்ளது.

<<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தல் முடிந்தபிறகு அஸ்ஸாமில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா தெரிவித்துள்ளார்.

குவஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பலதார திருமண முறையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மக்களவைத் தேர்தலில், அஸ்ஸாம் மாநிலத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றிபெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

குற்றச்சாட்டின் பேரில் சிறையில் உள்ள ஆம் ஆத்மி கட்சியின் தலைவர்களில் ஒருவரும், தில்லி முன்னாள் அமைச்சருமான திரு சத்யேந்திர ஜெயின் மீது சிபிஐ விசாரணை நடத்துவதற்கு மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

மற்றொரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் இருக்கும் திரு சுகேஷ் சந்திரசேகர் என்பவர் அளித்த வாக்குமூலத்தின்படி, திரு சத்யேந்திர ஜெயின் அமைச்சராக இருந்தபோது தம்மிடம் பத்து கோடி ரூபாய் பணம் கேட்டதாக புகார் அளித்திருந்தார்.

இந்த புகார் 2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தில்லி துணை நிலை ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கில் ஆம் ஆத்மி கட்சியின் மற்றொரு அமைச்சர் திரு கைலாஷ் கெலாட் விசாரணைக்கு ஆஜராகுமாறு அமலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

<<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலத்தின் மாவு சதார் தொகுதியிலிருந்து சட்டப்பேரவை உறுப்பினராக ஐந்து முறை தேர்ந்தெடுக்கப்பட்ட முக்தார் அன்சாரி அண்மையில் மாரடைப்பால் காலமானார்.

அவரது மறைவு குறித்து மூன்று நீதிபதிகளை கொண்ட விசாரணைக்குழு அமைக்க **Banda** குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, கூடுதல் தலைமை நடுவர் நீதிமன்ற நீதிபதி கரிமா சிங், இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக செயல்படுவார்.

இந்த அறிக்கையை விசாரணைக்குழு ஒருமாத காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமையன்று **Banda** மருத்துவ கல்லூரியில் சிகிச்சை பெற்று வந்த முக்தார் அன்சாரி, மாரடைப்பால் காலமானதையடுத்து உத்தரப்பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் வன்முறைகள் ஏற்பட்டன.

இதனையடுத்து, அங்கு தடை உத்தரவு பிறப்பிக்ககப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தீண்டாமையை ஒழிக்கும் விதத்தில் வைக்கம் சத்தியாகிரக போராட்டம் 100 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய நாள் இன்று நினைவுகூரப்படுகிறது.

சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் நாளாகவும் இது கருதப்படுகிறது.

பின்தங்கிய வகுப்பினர், கேரளாவின் கோட்டயம் மாவட்டத்தில் உள்ள வைக்கம் மகாதேவ ஆலயத்திற்குள் நுழைவதற்கும், அப்பகுதியில் நடப்பதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அந்த தடையை நீக்கக்கோரி 1924-ஆம் ஆண்டு மார்ச் 30-ஆம் தேதி தொடங்கி, 1925-ஆம் ஆண்டு நவம்பர் 23-ஆம் தேதி வரை அகிம்சை வழியில் 603 நாட்கள் போராடி வெற்றிபெற்றனர்.

இந்த போராட்டத்தை ஸ்ரீ நாராயண குரு, மன்னத்து பத்மநாபன், ஈ வே ராமசாமி, டி கே மாதவன், கே கேலப்பன், கே பி கேசவமேனன் ஆகியோர் முன்நின்று நடத்தினர்.

தேசப்பிதா மகாத்மா காந்தியின் தலையீட்டிற்கு பிறகு அன்றைய திருவாங்கூர் மாகாணத்தின் தலைமைபொறுப்பில் இருந்த சேது லஷ்மிபாயுடன் உடன்படிக்கை ஏற்பட்டு கோவிலின் வடக்கு, தெற்கு, மேற்கு வாயில்கள் திறக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர், 1936-ஆம் ஆண்டு ஆலய நுழைவு சட்டத்தின்படி, கிழக்கு வாயிலும் திறக்கப்பட்டு அனைத்து தரப்பினரும் அனுமதிக்கப்பட்டனர்.

<<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

செங்கல்பட்டு மாவட்டத்தில் முதல் முறையாக தேர்தலில் வாக்களிக்க இருக்கும் மாணவிகள் வாக்களிப்பது ஜனநாயக கடமை என்று தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - மாணவிகள் - 29 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

குன்னூரிலிருந்து உதகைக்கு இன்று முதல் ஜூலை ஒன்றாம் தேதி வரை, வாரத்தில் நான்கு நாட்கள் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

கோடைகால சீசனை முன்னிட்டு, உதகையில் கடந்த சில நாட்களாக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

பிரபல திரைப்பட நடிகர் டேனியல் பாலாஜி இன்று காலை சென்னையில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 48.

இவர் வேட்டையாடு விளையாடு, பொல்லாதவன், வட சென்னை உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களில் நடித்துள்ளார்.

மறைந்த டேனியல் பாலாஜியின் கண்கள் தானம் செய்யப்பட்டு, அவரது உடல் அஞ்சலிக்காக சென்னை புரசைவாக்கத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது உடலுக்கு திரைப்பட கலைஞர்கள் மற்றும் ரசிகர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இன்று மாலை அவரது உடல் தகனம் செய்யப்படும் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

<<<<<<<>>>>>>

ஹமாஸ் அமைப்புடன் சண்டை நிறுத்த பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

பேச்சுவார்த்தை தொடர்பான கூட்டம் கத்தார் மற்றும் எகிப்தில் அடுத்த சில நாட்களில் நடைபெறவுள்ள நிலையில், இஸ்ரேல் தரப்பிலிருந்து குழுவை அனுப்பிவைப்பதற்கு அவர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, காஸாவில் தொடர்ந்து இஸ்ரேலியப்படைகள் தாக்குதல் நடத்திவருவதையடுத்து, அங்கு இன்னும் சில வாரங்களில் கடுமையான பஞ்சம் ஏற்படுவதற்கு வாய்ப்பிருப்பதாக சர்வதேச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

அங்கு தடையில்லாமல் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை இஸ்ரேல் உறுதி செய்ய வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<<>>>>>>

மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை இன்று அமெரிக்காவின் **Austin Krajicek –** குரேஷியாவின் இவான் டோடிக் இணையை எதிர்கொள்கிறது.

<<<<<<<>>>>>>

மேட்ரிட்டில் நடைபெற்று வரும் ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சிக்கி ரெட்டி – சுமித் ரெட்டி இணை பங்கேற்கிறது.

<<<<<<<>>>>>>

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் பெங்களூரு இன்று ஒடிசா அணியை எதிர்கொள்கிறது. மற்றொரு ஆட்டத்தில், ஜாம்ஷெட்பூர் - கேரள அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<<>>>>>>

ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – ருதுஜா போஸ்லே இணை தோல்வியடைந்தது.

<<<<<<<END>>>>>>